[9th March 1964

வனஸ்பதி தொழிற்சாலை

*192 கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: No.

*193 கேள்வி.—திரு. மு. சண்முகம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதி 602-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலை ஒட்டி விழுப்புரத்தில் மெட்ராஸ் வனஸ்பதி லிமிடெட் கம்பெனியால் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை நிறுவும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: The management are taking steps to run the factory either directly or through a lessee.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: விழுப்புரத்தில் இருக்கிற மதராஸ் வனஸ்பதி லிமிடெட் என்ற தொழிற்சாலையை சென்ற 10 ஆண்டு காலமாக அங்கே ஆரம்பிப்பதாக இருந்து வருகிறது. ஆனால் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அரசாங்கத்தினுடைய பணம் ஏறக்குறைய 10 லட்சத்திற்கு மேல் அந்த பாக்டரிக்குக் கடனாகவும், மின்சாரக் கட்டணமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வரை எவ்வளவு வசூல் ஆகியது? அப்படி ரூ. 10 லட்சம் வசூல் ஆகவில்லை என்றால், அரசாங்கமே இதை ஏன் எடுத்து நடத்தக் கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நமக்கு வரவேண்டிய தொகை எல்லாம் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது. வருஷா வருஷம் இன்ஸ்டால்மெண்டுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பாக்கியிருப்பது, முதலுக்காக ரூ. 6,60,000, வட்டிக்காக ரூ. 5 லட்சம், இதுதான் பாக்கி. இதை சர்க்கார் எடுத்து நடத்துவதாக உத்தேசமில்லை. காரணம் என்னவென்றால் மணிலாக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பது ஒரு ஸ்பெகுலேடிவ் டிரேட். விலைவாசிகள் தாறுமாறாக ஏறியிறங்கும். அந்தத் தொழிலை சர்க்கார் செய்வதற்கு போதிய வசதிகள் கிடையாது. ஆனால் இதை மூடிவிடவேண்டும் அல்லது ஏலம் போட்டு பணத்தை வசூலிக்க வேண்டுமென்கிற அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்ள முடியாது. சர்க்கார் அதை நடத்துவதற்குக் காலம் கொடுத்து, இயந்திரங்களைப் புதுப்பிப்பதற்கும், மின்சாரம் முதலியவைகள் கொடுத்து, அதை ஓட்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

9th March 1964]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அந்த பாக்டரியிலிருந்து அரசாங்கத்துக்கு வரவேண்டிய தொகை ரூ. 11 லட்சம் என்று சொன்னார்கள். இப்பொழுது அங்கேயிருக்கிற இயந்திரங்களை அப்புறப்படுத்துவதாக அறிகிறேன். அரசாங்கத்தின் பணம் போகாமல் இருப்பதற்கு, அந்த பாக்டரியில் மொத்த மதிப்பீடு ரூ. 11 லட்சம் இருக்குமா என்று அரசாங்கம் விசாரணை செய்யுமா? அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படாத வகையில், அதை உடனடியாக ஏலம் போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை ஏலம் போடுகிற உத்தேசம் அரசாங்கத்துக்குக் கிடையாது. எப்படியாவது நடத்த வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய நோக்கம். அதிலிருக்கிற இயந்திரங்களை மாற்ற முடியாது. வெளியேற்ற முடியாது. அவை எல்லாம் சர்க்காருக்கு மார்ட்கேஜ் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு மாற்ற முயற்சி செய்கிறார்கள் என்று கனம் அங்கத்தினருக்கு கிடைத்திருக்கும் தகவல் சரியல்ல. இப்பொழுதுதான் மிகப் பெரிய வனஸ்பதி செய்யக்கூடிய கம்பெனிகள் வந்து பார்த்து, தங்களுக்கு லீசுக்கு வேண்டுமென்று ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, மாற்ற முயற்சிக்கிறார்கள் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது.

திரு. எம். எஸ். மணி : தமிழ் நாட்டில் தனியார் துறையில் எத்தனை வனஸ்பதித் தொழிற்சாலைகள் இருக்கின்றன? அவைகளுக்கு அரசாங்கம் எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது இரண்டு மூன்று இருக்கின்றன. திருச்சியிலே ஒன்று இருக்கிறது. இரண்டாவது விழுப்புரத்திலே உள்ளது. சர்க்கார் விழுப்புரம் தொழிற்சாலைக்குத்தான் பணம் கொடுத்திருக்கிறார்கள். திருச்சி தொழிற்சாலைக்குப் பணம் கொடுக்கவில்லை.

Geological Survey in Ramanathapuram district

* 194 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the findings of the Geological Survey made recently in Kariyapatti Block of Ramanathapuram district;

(*b*) whether there are proposals to start any industry in that area based on the findings of the Geological report; and

(*c*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) to (*c*) Kariyapatti Block of Ramanathapuram district was investigated by the State Geological Branch with a view to assess their potentialities of the saline efflorescences occurring in the area. Two million tons of Karkar on the eastern side of Kariyapatti Block and 19,000 tons of saline materials are available near Chittikulam, Mudukkankulam and P. Pudupatti. They are not sufficient for starting any industry in the area.